**செய்தி வெளியீடு எண்: 186** **நாள்: 16.03.2013**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மொழியாக்கத் திருநாள் கொண்டாட்டம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் **மொழியாக்கத் திருநாள்** இன்று (16.03.2013) மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்டவர்களை நிறுவன இயக்குநர் முனைவர். கோ. விசயராகவன் அவர்கள் வரவேற்று உரையாற்றினார்.

இவ்விழாவில் முதன்மை உரையாற்றிய தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப., அவர்கள் மொழியாக்கத் திருநாள் செப்டம்பர் 30 அன்றுத்தான் உலக அளவில் கொண்டாடப்படுகிறது. ஆனால் இன்று திருக்குறளினை சீனமொழியில் மொழிபெயர்த்த கவிஞர் யூஷியின் பிறந்தநாளை முன்னிட்டு மொழியாக்கத் திருநாள் கொண்டாடப்படுகிறது. தமிழ்மொழி உலகின் மிகச் சிறந்த மொழிகளில் ஒன்று என்றும் மிகப் பழமை வாய்ந்த முதன்மை மொழி என்றும் குறிப்பிட்டு அமெரிக்காவின் மிகப் பெரும் ஆராய்ச்சியாளரும் பேராசிரியருமான அலெக்ஸ் கொலியர் அவர்களின் கூற்றுப்படி ஒரு காலத்தில் உலகில் ஒரே ஒரு மொழித்தான் நாம் அனைவரும் பயன்படுத்தியுள்ளோம் என்றும், அந்த ஒரே மொழி தமிழ்மொழி என்றும், சங்க இலக்கியப் பாடல்களில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வறண்டுபோன நதிகளைப் பற்றியும் ஒரு அரிய குறிப்பையும் தனது ஒளிப்பதிவில் பதித்துள்ளதாக குறிப்பிட்டார். மேலும் திருக்குறள் இதுவரை 37 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றும், இதில் 13 இந்திய மொழிகளிலும், 10 கிழக்காசிய நாடுகளின் மொழிகளிலும், 14 ஐரோப்பிய நாடுகளின் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும், திருக்குறள் நரிக்குறவர் பேசும் வக்போலி மொழியிலும் கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு, இதுவரை திருக்குறள் ஆங்கிலத்தில் 96 பேர் மொழிபெயர்த்துள்ளதாகக் குறிப்பிட்டு அதற்கான புள்ளி விவரங்களையும் அளித்தார். மேலும் அவர்தமது முதன்மையுரையில்,

**இறைவன் மனிதனுக்கு அருளியது கீதை**
**மனிதன் இறைவனுக்கு வழங்கியது திருவாசகம் – ஆனால்**
**மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்**

என்று அவர்குறிப்பிட்டபோது அரங்கத்தில் கரவொலி எழுந்தது.

இவ்விழாவில் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், தாய்வான் நாட்டின் பொருளியல் மற்றும் பண்பாட்டு மைய தலைமை இயக்குநர் திரு. பிராங்கு மின் செங் லிம், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கா.மு. சேகர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சக மொழிபெயர்ப்புத் திட்ட ஆசிரியர் திருமதி மினி கிருஷ்ணன் ஆகியோர் விளக்கவுரை ஆற்றினர். இறுதியாக நிறுவனத் தனிஅலுவலர் திரு. மார்டின் செல்லதுரை அவர்கள் நன்றியுரை கூற விழா சிறப்புடன் முடிவுற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**